தமிழ் வளர்ச்சித் துறை

ஆட்சிச் சொல்லகராதி
பொது
(ஆங்கிலம்–தமிழ்)

Glossary of Administrative Terms
General
(English-Tamil)

தமிழ்நாடு அரசு
2015

தமிழ் வளர்ச்சித் துறை

ஆட்சிச் சொல்லகராதி

பொது

(ஆங்கிலம்–தமிழ்)

Administrative Glossary

General

(English - Tamil)

Dr. தமிழ்ப்பரிதி

முதன்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப.,

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

பதிப்பாசிரியர்

முனைவர் கா.மு. சேகர், எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி

இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம்

417-4—1

நூல் விவரம்

நூலின் பெயர்	:	ஆட்சிச் சொல்லகராதி (பொது)
முதன்மைப் பதிப்பாசிரியர்	:	முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப.
பதிப்பாசிரியர்	:	முனைவர் கா. மு. சேகர்
பதிப்பு	:	ஏழாம் பதிப்பு
பக்கம்	:	628+10
மொழி	:	தமிழ் / ஆங்கிலம்
தாளின் தன்மை	:	
நூலின் அளவு	:	டெம்மி
எழுத்து	:	
வெளியீடு	:	தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8
அச்சிட்டோர்	:	அரசு மைய அச்சகம், சென்னை–79

விலையில்லா நூல்

பதிப்பு விவரம்

முதற் பதிப்பு	–	1957
இரண்டாம் பதிப்பு	–	1962
மூன்றாம் பதிப்பு	–	1971
நான்காம் பதிப்பு	–	1983
ஐந்தாம் பதிப்பு	–	1990
ஆறாம் பதிப்பு	–	2000
ஏழாம் பதிப்பு	–	2015

நூல் தொகுப்புக்குழு

1. முனைவர் வ. ஜெயதேவன்
தமிழ்த் துறைத் தலைவர் (ஓய்வு)
முதன்மைப் பதிப்பாசிரியர்
தமிழ்ப் பேரகராதித் திருத்தப் பணித் திட்டம்,
சென்னை பல்கலைக்கழகம்.

2. முனைவர் இ. மறைமலை
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
மாநிலக் கல்லூரி
சென்னை–5

3. முனைவர் ந. அருள்
இயக்குநர்,
மொழிபெயர்ப்புத் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

4. திரு. கு. பாலசுப்பிரமணியன்
துணை இயக்குநர் (ஓய்வு)
மொழிபெயர்ப்புத் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை–9

5. முனைவர் மு. கண்ணன்
பதிப்பாசிரியர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சென்னை–40

6. திரு. மா. பூங்குன்றன்
பதிப்பாசிரியர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சென்னை–40

7. திரு. சு. வீரவேலு
பதிப்பாசிரியர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
சென்னை–40

8. திரு. அ. மதிவாணன்
மேனாள் கல்லூரிக் கல்வி உதவி இயக்குநர்
சென்னை

9. முனைவர் பா. கிருஷ்ணன்
செய்தி ஆசிரியர் (ஓய்வு)
தினமணி நாளிதழ்

10. முனைவர் ஆ. தசரதன்
பதிப்புத்துறைப் பொறுப்பாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை–113.

11. புலவர் வெற்றியழகன்
தமிழறிஞர்
சென்னை–114.

12. செல்வி சொ. கலைச்செல்வி
முதுநிலை ஒப்பச்சர்
தமிழ் வளர்ச்சி இயக்ககம்
சென்னை–8

திரு. **கே.சி. வீரமணி**
மாண்புமிகு பள்ளிக் கல்வி, தொல்லியல்,
தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்
பண்பாட்டுத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை–600 009.

வாழ்த்துரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கு அரிய பல திட்டங்களை அறிவித்ததுடன் அவற்றைத் தமிழ் வளர்ச்சித் துறை செம்மையுறச் செயற்படுத்த ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகிறார்கள். ஆட்சிமொழிச் செயலாக்கத்தை விரைவுபடுத்தும் நோக்கில் அம்மா அவர்கள் ஆற்றிவரும் அரும்பணிகள் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

இவ்வகையில் ஆட்சிமொழித் திட்டத்தை அரசு அலுவலகங்களிலும், அரசுசார் அலுவலகங்களிலும் செம்மையாகச் செயற்படுத்திடத் துணைபுரியும் வகையில் மக்களுக்கு எளிதாகப் புரியும் வகையில் இனிய எளிய தமிழில் ஆட்சிச்சொல்லகராதி ஏழாம் பதிப்பு வெளியிடப்பெறுகிறது. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான நிருவாக நடைமுறைச் சொற்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இதுவரை ஆறு பதிப்புகள் வெளியிடப்பெற்று அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் விலையின்றி வழங்கப்பெற்றுள்ளன. ஆறாம் பதிப்பில் வெளியான சொற்கள் தமிழறிஞர் குழுவால் சீராய்வு

செய்யப்பெற்றும் புதிய சொற்கள் சேர்க்கப்பெற்றும் தற்போது **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் சீரிய நல்லாட்சியில் சிறப்புடன் ஏழாம் பதிப்புப் புதுப்பொலிவுடன் வெளியிடப்பெறுகிறது.

தமிழ் ஆட்சிமொழித் திட்டம் செம்மையுறச் செயல்படவும், அரசு அலுவலகங்கள் தோறும் தமிழ்மொழி தனித்தன்மையோடு மாட்சிமையுடன் விளங்கிடவும் புதிய ஆட்சிச் சொல்லகராதி பெருந்துணையாய் அமையும். புதிய ஆட்சிச் சொற்களுடன் வெளிவரும் இந்நூல் அனைவருக்கும் பயனளிக்க வாழ்த்துகிறேன்.

அன்புடன்

(கே.சி. வீரமணி)

முனைவர் **மூ. இராசாராம்** இஆப
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை

சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட 23–1–1957ஆம் ஆண்டு முதன்முதலாகத் தமிழ் ஆட்சிச் சொல் அகராதி வெளியிடப்பெற்றது. இதனைத் தொடர்ந்து சிறப்புச் சொல் துணை அகராதிகள், தமிழ்ச் சுருக்கெழுத்து நூல், மாதிரி வரைவுகள், ஆட்சித் தமிழ் ஆகிய நூல்கள் துறையால் வெளியிடப்பட்டன. இந்நூல்கள் அனைத்தும் ஆட்சிமொழித் திட்டம் சிறப்புற நடைபெற வழிகோலியது.

அரசு அலுவலகச் செயற்பாடுகள் மீது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஆட்சிச் சொல் அகராதியின் தேவை அதிகரித்திருப்பதனை அறிய நேரிட்டது. இதன் அடிப்படையில் ஆட்சிச் சொல் அகராதியின் புதிய பதிப்புகள் அடுத்தடுத்து வெளியிடப்பட்டன.

சொல்வங்கிக் கூட்டங்களில் குழுவால் ஆராய்ந்து கண்டெடுக்கப்பட்ட புதிய சொற்களும் ஆட்சிச் சொல் அகராதியில் சேர்க்கப்பட்டன.

தற்போதைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் புதிய சொற்களைக் கொண்டு செம்மைப்படுத்தப்பட்ட இப்பதிப்பு உருப்பெற்றுள்ளது. தமிழ் வளர்ச்சித் துறை உயர் அலுவலர்கள் ஆட்சிமொழித் தமிழின் மாட்சியைப் போற்றும் வகையில் பல்வேறு திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றி வருகின்றனர்.

அரசின் கவனம் முழுவதும் ஆட்சிமொழித் தமிழின் அகன்ற வளர்ச்சியில் ஈர்க்கப்பட்டதனால் புதிய புதிய அறிவிப்புகளால் பொலிவு பெறும் பொன்னான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏழாம் பதிப்புக் கூடுதல் சொற்களைத் தாங்கி அரசு அலுவலகங்களுக்குத் துணை புரியத் தயாராகியுள்ளது. அனைவரும் பெற்றுப் பயனுறும் வகையில் அமைந்த பதிப்பு இது. பெறுவீர்! பயனடைவீர்!

(மூ. இராசாராம்)
அரசு செயலாளர்

முனைவர் **கா.மு. சேகர்**
இயக்குநர்
தமிழ் வளர்ச்சித் துறை

எழும்பூர்
சென்னை –600 008.

முன்னுரை

தமிழகமெனும் நன்னிலத்தைப் பொன்னிலமாக்க எண்ணிலா நற்செயல்களை ஏற்றத்துடன் செய்துவரும். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் தமிழின் திறம் ஓங்கி உயர்ந்து ஒளிர்ந்து வரும் உன்னதம் எண்ணி மகிழத்தக்கது.

இப்பொற்கால ஆட்சியில் தமிழ் வளர்ச்சித் துறைக்கெனத் தக்கபல அறிவிப்புகள், ஆணைகள், விருதுகள் எனத் துறையின் நற்கோல வளர்ச்சிக்கு வித்திட்டு வீறுடன் தமிழைத் துலங்கிடச் செய்து வருவது எவர்க்கும் இனிமை பயப்பது.

ஆட்சிமொழித் தமிழ் அரியணையேறிய நாள் முதலாய் அகராதிகள் ஆறு பதிப்புவரை அரசு அலுவலகங்களின் பயன்பாட்டிற்கென வெளியிடப்பட்டுத் தமிழின் தகைமைக்குச் சான்று பகர்கின்றன. அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் தமிழ் ஆரவாரமின்றி அணிபெற்று அரங்கேறும் வண்ணம் அகராதியின் தேவை அதிகரித்து வருகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு அரிய பல புதிய சொற்களைச் சேர்த்து ஏழாம் பதிப்பு அனைவர் கரங்களிலும் ஏந்தத் தயாராகவுள்ளது.

முன்னேறிவரும் கணினியுகத்தின் புழக்கத்திலுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக அழகுதமிழ்ச் சொற்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இவ்வகராதி அரசு அலுவலகங்களுக்கு மட்டுமல்ல தமிழர்கள் அனைவருக்கும் கைவிளக்காய்த் திகழும் என்பதில் ஐயமில்லை.

(கா.மு. சேகர்)
இயக்குநர்

ஆட்சிச்சொல்லகராதி–பொது
Administrative Glossary - General
A

A; An	-	ஒரு; ஓர்
A few	-	ஒருசில; சில
A letter to this effect	-	இவ்வகையான ஒரு கடிதம்
A little	-	குறைவான; கொஞ்சம்
A one	-	முதல்தரமான
A while	-	சிறிது நேரம்
A.M.	-	முற்பகல் (மு.ப.)
A.Memo.	-	ஒப்படைக் குறிப்பு (ஒ.கு.)
Aback	-	திகைப்புற்று; வியப்புற்று
Abandon	-	விட்டுவிடு; கைவிடு
Abandoned	-	கைவிடப்பட்ட; துறக்கப்பட்ட
Abandonment	-	ஈகம்; துறப்பு; கைவிடல்
Abandonment of Revenue	-	வருவாயைக் கைவிடுதல்
Abate	-	குறை; கழி; தணி; தள்ளுபடிசெய்; தள்ளிவிடு; விலக்கி வை; மட்டுப் படுத்து
Abatement	-	குறைப்பு; கழிப்பு; தள்ளுபடி
Abatement of Charges	-	செலவுக் குறைப்பு; கட்டணக் குறைப்பு; கட்டணத் தள்ளுபடி
Abatement of suit	-	வழக்கழிவு; வழக்கறவு; வழக்கறுதல்
Abbot	-	மடத்தின் தலைவர்
Abbreviate	-	சுருக்கு
Abbreviated	-	சுருக்கப்பட்ட
Abbreviation	-	சுருக்கம்; சுருக்கக் குறியீடு
Abdication	-	உரிமையைத் துறத்தல்; கைவிடுதல்; அரசுரிமையைத்/குடியுரிமையைத் துறத்தல்

Abduct	-	ஆள் கடத்து; கடத்திச் செல்
Abduction	-	கடத்திச் செல்லுதல்
Aberration	-	பிறழ்ச்சி; நிலையினின்று விலகுதல்; நிலையினின்று வழுவுதல்; நெறியிலிருந்து தவறுதல்
Abetment	-	குற்றச்செயல்களுக்குத் தூண்டுதல்; உடந்தை; தீயசெயலுக்கு உதவுதல்
Abeyance	-	நிறுத்தி வைத்தல்; விட்டுவைத்தல்; காலம்தாழ்த்தி வைத்தல்
Abhor	-	வெறு; தள்ளு; வெறுத்தொதுக்கு
Abidance	-	நெறிகளைக் கடைப்பிடித்தல்
Abide (by):	-	உண்மையாக நிறைவேற்று; இணங்கி ஒழுகு; கடைப்பிடி; பின்பற்று
Abide by	-	கடைப்பிடி; பின்பற்று
Abide by rules	-	நெறிகளைக் கடைப்பிடி
Abiding	-	நிலையான
Abiding interest	-	நிலையான அக்கறை; தொடர்ந்த ஆர்வம்
Abidingly	-	நிலையாக
Ability	-	திறம்; திறமை; ஆற்றல்; வல்லமை
Ability Test	-	திறனறி தேர்வு
Abjection	-	தன்மதிப்பை இழந்தநிலை; இழிநிலை; இழிதகவு; கீழ்மை
Abjure	-	ஆணையிட்டுக் கைவிடு ; விட்டொழி
Ablation	-	அகற்றுதல்; தேய்தல்
Ablaze	-	கொழுந்துவிட்டு எரிகின்ற; சுடர் விடுகின்ற
Able	-	ஆற்றலுடைய; திறமையுள்ள; வல்லமையுள்ள; இயலுகிற
Able-bodied	-	உடல்வலுவுடைய
Ablush	-	நாணமுற்று; நாணி
Ablution	-	நீரா(ட்)டல்
Abnegation	-	அரசியல் அதிகாரத்தைத் துறத்தல்; புறக்கணித்தொதுக்கல்
Abnormal	-	இயல்பு மீறிய; இயல்புக்கு மாறான
Aboard	-	கப்பலில்; வானூர்தியில்; ஊர்தியில்

Abode	-	உறையுள்; இல்லம்; இருப்பிடம்; வாழ்விடம்
Abolish	-	நீக்கிவிடு; ஒழித்துவிடு
Abolition	-	நீக்கல்; ஒழித்தல்
Abolition of Post	-	பணியிட நீக்கம்
Aboriginal	-	தொன்முதிய; மூலக்குடி சார்ந்த
Aborigines	-	தொன்முதுவர்; பழங்குடியினர்; மூலக்குடியினர்
Abortion	-	கருச்சிதைவு; கருக்கலைப்பு
Abortive	-	உருப்பெறாத; சிதைந்த; பயனற்ற
Abound	-	மிகுந்திரு; நிரம்பியிரு; நிரம்பிவழி
About	-	குறித்து; பற்றி; சுற்றி; ஏறத்தாழ
Above	-	மேலே; உயரமாக; அதிகமாக
Above all	-	எல்லாவற்றிற்கும் மேலாக
Above average	-	இயல்புக்கு மேலான
Above Board	-	களங்கமற்ற; ஐயத்திற்கிடமில்லாத
Above cited	-	மேற்காட்டிய; மேற்சுட்டிய
Above mentioned	-	மேற்குறிப்பிட்ட
Above Normal	-	இயல்பின் மிகுந்த; இயல்பினும் மேலான
Above par	-	அதிக விலையில்
Above quoted	-	மேலே எடுத்துரைக்கப்பட்ட
Above said	-	மேற்கூறிய; முற்கூறிய
Above standard	-	அளவிற்கு மேலான; தரத்திற்கு மேலான
Above written	-	மேலே எழுதியுள்ள
Abrasive	-	உப்புத்தாள்; உராய்வுப்பொருள்; தேய்க்கக்கூடிய ; அரைக்கக்கூடிய
Abreast	-	காலத்திற்கேற்றவாறு ; இணையான; நிலையொத்து; பக்கம் பக்கமாக
Abridge	-	சுருக்கு; குறை; சிறிதாக்கு
Abridged Edition	-	சுருக்கப் பதிப்பு
Abridged form	-	சுருக்கிய வடிவம்
Abridged Report	-	சுருக்க அறிக்கை
Abridgement	-	சுருக்கம்; குறுக்கம்
Abroad	-	வெளிநாட்டிற்கு

Abrogate	-	வழக்கொழியச் செய்; திரும்பப்பெறு; அழி; நீக்கு
Abrogation	-	தவிர்ப்பு, தவிர்த்தல்
Abrupt	-	திடீரென; திடீரென்ற; திடுமென;
Abruptly	-	திடீரென; திடீரென்று; திடுமென்று
Abscond	-	தலைமறைவாகு; பதுங்கு
Absconder	-	தலைமறைவானவர்; பதுங்கியவர்
Absconding	-	தலைமறைவாயுள்ள; பதுங்கிய
Absence	-	இல்லாதிருத்தல்; வருகை தராதிருத்தல்
Absent	-	இராத; வருகைதராமை
Absentee	-	இராதவர்; வராதவர்
Absentee Land Lord	-	வருகை தராத / செல்லாத நிலக்கிழார்; இடத்தில் இல்லாத நில உரிமையாளர்
Absentee Statement	-	வராதவர் குறித்த விளக்க அறிக்கை
Absenteeism	-	விலகியிருத்தல்; பணிக்கு வராதிருத்தல்; தவிர்த்தொதுங்கல்
Absent-minded	-	மறந்திருத்தல்; கவனக்குறைவான; மெய்மறந்து
Absolute	-	முற்றிலும்; முழுமையான; வரம்பற்ற; தனித்த; ஐயத்திற்கிடமற்ற
Absolute authority	-	முழு அதிகாரம்பெற்ற
Absolute majority	-	தனிப்பெரும்பான்மை
Absolute minimum	-	மிகக் குறுமம்
Absolute monopoly	-	முழுத் தனியுடைமை
Absolute occupancy right	-	இடத்திலிருந்து (உரிமைப்) பயன் கொண்ட முழு உரிமை
Absolute power	-	முழு அதிகாரம்
Absolute priority	-	தனி முன்னுரிமை
Absolutely	-	முற்றிலும்
Absolutely unavoidable	-	முற்றிலும் தவிர்க்க இயலாதது

Absolve	-	கடமையிலிருந்து வழுவியவரை மன்னித்துவிடு; குற்றச்சாட்டிலிருந்து விடுவித்துவிடு
Absorb	-	ஈர்த்துக்கொள்; உட்கொள்; உறிஞ்சு; ஏற்றுக்கொள்
Absorbed in the post	-	அப்பணியிடத்தில் ஈர்த்துக் கொள்ளப்பட்டார்/நிலையாக அமர்த்தப்பட்டார்
Absorbed	-	மனம் ஒன்றி ஈடுபட்ட; சூழ்ந்த
Absorber	-	உறிஞ்சி
Absorbing	-	கருத்தைக் கவர்கிற
Absorption	-	உறிஞ்சுதல்; மனம் ஒன்றிய நிலை
Abstain	-	விட்டிரு; தவிர்; ஒதுங்கு
Abstract	-	சுருக்கம்; சுருக்கக்குறிப்பு; பொழிப்பு
Abstract Bill	-	சுருக்கப் பட்டி
Abstract of Accounts	-	கணக்குகளின் சுருக்கக்குறிப்பு; கணக்குச் சுருக்கம்
Abstract Statement	-	சுருக்கப் பட்டியல்; சுருக்க அறிக்கை
Absurd	-	பேதைமை வாய்ந்த; மடமைவாய்ந்த; பொருந்தாத; பொருளற்ற
Abundance	-	மிகுதி; நிறைவு
Abundant	-	மிகுதியான; அதிகமான
Abuse	-	வசை; மோசடி; பழிகூறு; தவறாகப் பயன்படுத்து; கெடுவழக்கம்; இழிதொழில்
Abuse of Powers	-	அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல்; அதிகார மோசடி; அதிகார வீணடிப்பு
Abusive Language	-	வசைமொழி
Abutment	-	முட்டிடம்; உதைவு; சார்வு; விழாமல் தாங்கிப்பிடித்தல்; ஒட்டிக்கிடக்கை; பாலத்தின் தாங்கு கட்டுமானம்

Academic	-	கல்விசார்; கல்வி பற்றிய; கலை பற்றிய; அறிவுசெறிந்த; செயல் முறைசாரா
Academic Council	-	கல்விக்குழு
Academic Course	-	(செயல்முறைசாரா)க் கல்விப் படிப்பு; பாடநூற் கல்வி
Academic experience	-	கல்விப் பட்டறிவு
Academic qualification	-	கல்வித் தகுதி
Academician	-	கல்வியாளர்
Academy	-	கலைக் கழகம்; கல்விச் சாலை; கலைக்குழு
Academy of Tamil Culture	-	தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்
Accede	-	இணங்கு; பதவி மேற்கொள்
Accelerate	-	விரைவுபடுத்து; முடுக்கிவிடு; வேகப்படுத்து
Accelerated	-	விரைவுபடுத்தப்பட்ட
Accelerated Soil Erosion	-	விரைவான மண்ணரிப்பு
Accelerator	-	விசை முடுக்கி
Acceleration	-	முடுக்கம்; விரைவு இயக்கம்; விரைவுப்பெருக்கம்
Accelerative	-	விரைவுபடுத்தும் பாங்கில் அமைந்த
Accent	-	அசை அழுத்தம்; அழுத்தக் குறி; ஒலி எடுப்பு
Accept	-	ஒப்புக்கொள்; ஏற்றுக்கொள்
Acceptability	-	ஏற்புத்திறன்; ஏற்கத்தகும் தன்மை
Acceptable	-	ஏற்கத்தக்க
Acceptance	-	ஏற்பு; இசைவு; ஏற்றுக்கொள்ளுதல்; ஒப்புக்கொள்ளுதல்
Acceptance Certificate	-	ஏற்புச் சான்றிதழ்
Acceptance of bail	-	பிணை ஏற்பு
Acceptance of office	-	பதவி ஏற்பு
Acceptance of tender	-	ஒப்பந்தப்புள்ளி ஏற்பு
Accepted	-	ஏற்கப்பட்டது
Accepted and countersigned	-	ஏற்புடன் மேலொப்பமிடப்பட்டது
Accepted in Principle	-	கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது

Acceptor	-	ஏற்பவர்; ஏற்றுக்கொள்பவர்
Access	-	நுழைவு; நுழைவுரிமை; வழி; வாய்ப்பு
Accessibility	-	காட்சிக்கு எளிமை; அணுக இயலும் தன்மை
Accessible	-	அணுகத்தக்க; வாய்ப்பளிக்கத்தக்க
Accession	-	பதவியேற்பு; இணைக்கம்; உடைமையின் மேல் ஈட்டம்
Accessory	-	துணைப் பொருள்; ஒரு நாட்டின் நிலப்பகுதியுடன் வென்றெடுத்த நிலப்பகுதியைச் சேர்த்தல்
Accident	-	எதிர்பாரா நிகழ்ச்சி; விபத்து; ஏதம்
Accident Insurance	-	விபத்துக் காப்பீடு
Accident register	-	விபத்துப் பதிவேடு
Accident report	-	விபத்து அறிக்கை
Accident reserve fund	-	எதிர்பாரா நிகழ்வுகளுக்கான ஒதுக்கீட்டு நிதி; விபத்துக் காப்பு நிதி
Accident risk	-	விபத்து நேரும் இடர்
Accident spot	-	விபத்துத் தளம் / விபத்து நிகழ்விடம்
Accidental	-	தற்செயலாய்; எதிர்பாராத
Acclaim	-	பாராட்டு; ஆர்ப்பரி
Acclimatise	-	(புதிய சூழலுக்குப்) பழகிக்கொள்; பழக்கு
Accommodation	-	இடவசதி; குடியிருப்பு; ஒத்துப் போதல்; ஏற்பமைவு
Accommodation Control	-	இடவசதிக் கட்டுப்பாடு
Accommodation facility	-	இடவசதி
Accommodative	-	ஒத்துப்போகும் இயல்புடைய
Accompany	-	உடன்செல்; பின்தொடர்; இணை சேர்
Accomplice	-	உடந்தையாள்; குற்றத்துணை; உள்ளாள்; உள்கை
Accomplish	-	நிறைவேற்று; முடித்துவிடு
Accord	-	இசைவு; ஒப்பந்தம்; பொருத்தம்; அளி

Accord priority	-	முந்துரிமை அளி; முன்னுரிமை அளி
Accordance	-	இணக்கம்; பொருத்தம்
According to	-	ஏற்ப; பொருந்த; இணங்க
Accordingly	-	அவ்வண்ணமே; அதன்படி; அதற்கிணங்க
Account	-	கணக்கு; கணிப்பு; மதிப்பீடு
Account Code	-	கணக்கு விதித் தொகுப்பு
Account Contra	-	எதிர்க் கணக்கு
Account for	-	காரணங்கூறு; கணக்குக் கொடு; விடைசொல்
Account Payee	-	கணக்காளரே தொகை பெறுபவர்; கணக்குடைய தொகை பெறுநர்; கணக்கு வைத்திருக்கும் தொகை பெறுநர்
Account slip	-	கணக்குச் சீட்டு
Accountability	-	கணக்குப் பொறுப்பு; கணக்குக் காட்டும் பொறுப்பு; பொறுப்புடைமை
Accountable	-	கணக்குப் பொறுப்புடைய
Accountancy	-	கணக்கியல்
Accountant	-	கணக்கர்; கணக்காளர்
Accountant-General	-	கணக்காய்வுத் தலைவர்; மாநிலக் கணக்காய்வுத் தலைவர்
Accounting	-	கணக்கு வைப்பு
Accounting procedure	-	கணக்கு வைப்பு முறை
Accounting year	-	கணக்காண்டு
Accounts Officer	-	கணக்கலுவலர்
Accredit	-	செல்வாக்களி; நம்பிக்கை அளி; மதிப்பேற்று
Accredited agent	-	ஒப்புக்கொள்ளப்பட்ட முகவர்; ஏற்பளிக்கப்பட்ட முகவர்
Accretion	-	மேன்மேலும் வளர்ந்து கொண்டிருக்கிற
Acc[illegible]al	-	இயல்பாகச் சேர்தல்; சேர்ந்து வந்த தொகை
Accrue	-	சிறுகச்சிறுகச் சேர்; தொகு
Accumulate	-	குவி; சேர்; திரட்டு

Accuracy	-	துல்லியமான; நுட்பமான; தெளிவான
Accurate	-	துல்லியம்; நுட்பம்; தெளிவு
Accusation	-	குற்றச்சாற்று; குற்றச்சாட்டு
Accuse	-	குற்றஞ்சாட்டு
Accused	-	குற்றஞ்சாட்டப்பட்டவர்
Accustom	-	பழக்கு; பயிற்று
Achieve	-	எய்தப் பெறு; இலக்கெய்துதல்
Achievement	-	அருஞ்செயல்; அருவினை
Achromatic	-	வண்ணம் இல்லாத; நிறம் காட்டாத
Achromatic (Achromatically)	-	வாய்மொழியான; எழுத்தில் வராததான
Acid	-	காடிப் பொருள்; புளிமம்; அமிலம்
Acid oil	-	வழலை நெய்
Acid test	-	கடுந்தேர்வு; புளிம ஆய்வு
Acidometer	-	காடிமானி; புளிமமானி
Acknowledgement	-	ஒப்புகை; பெறுகை ஒப்பம்; ஒப்புகைச் சீட்டு; ஏற்றுக் கோடல்
Acknowledgement of payee	-	தொகை பெறுபவர் ஒப்புகை
Acoustic	-	ஒலிசார்
Acoustical	-	ஒலியியல் சார்தன்மை
Acoustics	-	ஒலியியல்
Acquaint	-	தெரிவி; அறிமுகமாக்கு; பழக்கப்படுத்து
Acquaintance	-	அறிமுகம்; அறிமுகமாயிருத்தல்
Acquiescence	-	தடைச் சொல்லின்றி உடன்படுதல்
Acquire	-	அடை; முயன்று பெறு; பற்று
Acquired	-	முயன்று பெற்ற
Acquisition	-	கையகப்படுத்துகை
Acquisition reference suit	-	நிலக் கையகப்படுத்துகை குறித்த வழக்கு
Acquisitive	-	கவரும் ஆர்வமுடைய; கைப்பற்றும் ஆர்வமுடைய; பிறர் பொருளை விரும்புகின்ற

Acquit	-	விடுவி; குற்றமின்மையை அறிவி; கட்டணத் தள்ளுபடி; குற்றச் சாட்டினின்று விடுவி; பழி நீக்கு
Acquittance	-	பற்றொப்பம்
Acquittance register	-	பற்றொப்பப் பதிவேடு
Acquittance Roll	-	பற்றொப்பப் பட்டியல்
Acquittal	-	குற்ற விடுதலை; கடன் விடுதலை
Acre	-	ஏக்கர்
Acreage	-	நிலப் பரப்பளவு (ஏக்கரில்)
Acrimonious	-	எரிச்சலான; கடுமையான
Across	-	குறுக்காக
Act	-	செயல்; நாடகக் களம்; சட்டம்
Act upto	-	நிறைவேற்று; சொன்னபடி செய்
Acted in service	-	பணியிலிருந்தார்
Acting	-	மாற்றாள்முறைப் பணியாற்றுகிற; முறைப்பணியாற்றுகிற
Acting arrangement	-	குறுங்காலிக (தற்காலிக) ஏற்பாடு
Acting in good faith	-	நல்லெண்ணத்துடன் செயலாற்றுதல்
Acting incumbent	-	மாற்றாள் முறையில் பணிப் பொறுப்பாளர்
Acting personnel	-	மாற்றாள் முறைப் பணியாளர்
Acting service	-	மாற்றாள் பணி; மாற்றாள் முறைப் பணி; முறைப் பணி
Action	-	செயல்; நடவடிக்கை
Action Committee/Action Group	-	நடவடிக்கைக் குழு / செயற்குழு
Actionable wrongs	-	நடவடிக்கைக்குரிய முறைகேடுகள்
Activate	-	சுறுசுறுப்பாக்கு; செயற்படுத்து
Active	-	சுறுசுறுப்பான; செயல்திறமுடைய
Active consideration	-	முனைப்பாகக் கருதிப்பார்த்தல்; மும்முரமாகக் கவனித்தல் / கருதுதல்
Active ingredients	-	செயல்திறன்; ஆக்கக் கூறுகள்
Active service	-	மும்முரப்பணி / பணியிலிருத்தல்
Active support	-	தீவிர/மும்முர ஆதரவு; செயல்முறை ஆதரவு
Active Unit	-	செயல்படும்/இயங்கும் பிரிவு

Activity	-	செயல்; நடவடிக்கை
Actual	-	உள்ளபடியான; உண்மையான; சரியான; பட்டாங்கு
Actual Balance	-	சரியான/உண்மையான இருப்பு
Actual Expenditure	-	உண்மையான செலவு
Actual Journey time	-	சரியான பயண நேரம்
Actual Receipt	-	உண்மையான வரவு
Actually transported	-	சரியாகக் கொண்டு சென்ற
Actuate	-	தூண்டு; ஏவு; உந்து
Acumen	-	மதிக்கூர்மை; நுண்ணறிவு நுழைபுலம்
Acupressure	-	தொடுகைப் பண்டுவம்
Acupuncture	-	தொடுஊசிப் பண்டுவம்
Acute	-	கூர்மையான; முனைப்பான; கடுமையான
Ad valorem	-	விலை மதிப்பீட்டின்படி; பெறுமானப்படி
Ad valorem duty	-	மதிப்பீட்டின்படித் தீர்வை
Adage	-	முதுமொழி
Adamant	-	விடாப்பிடி
Adapt	-	தழுவு; பொருத்தமாக்கு
Adaptability	-	தழுவும் தன்மை; பொருத்தமாக்கிக் கொள்ளும் தன்மை
Adaptation	-	தழுவல்; பொருத்தமாக்கிக் கொள்ளுதல்
Adaptation of Law	-	சட்டத் தழுவல்
Adapted Law	-	தழுவல் சட்டம்
Add	-	சேர்; இணை; தொடர்ந்து கூறு
Add back	-	பிற்சேர்க்கை
Addendum	-	பின்னிணைப்பு; பிற்சேர்க்கை
Addict	-	வழக்கமாக்கு; பழக்கத்திற்கடிமை
Addiction	-	பழக்கத்திற்கு அடிமையாதல்
Addition	-	கூட்டல்; சேர்த்தல்
Additional	-	கூடுதல்
Additional allotment	-	கூடுதல் ஒதுக்கீடு
Additional charge	-	கூடுதல் பொறுப்பு

Additional Examiner	-	கூடுதல் தேர்வாளர்
Additional Fee	-	கூடுதல் கட்டணம்
Additional Post	-	கூடுதல் பணியிடம்
Additional security	-	கூடுதல் பிணையம்/கூடுதல் பாதுகாப்பு
Additional taxation	-	கூடுதல் வரிவிதிப்பு ; கூடுதல் வரியேற்றம்
Address	-	முகவரி உரை
Addressee	-	முகவரியாளர்; பெறுநர்
Adduce	-	சான்றாகக் கூறு; எடுத்துச் சொல்
Adept	-	திறமுடையார்; கைதேர்ந்தவர்
Adequacy	-	ஏற்ற அளவு; போதுமான அளவு
Adequate	-	போதிய; ஏற்ற
Adhere	-	கடைப்பிடி; ஒட்டி ஒழுகு
Adherence of due dates	-	உரிய நாளைக் கடைப்பிடித்தல்; உரிய நாளில் செயற்படுதலைப் பின்பற்றுதல்
Adhesive	-	ஒட்டிக்கொள்கிற; பசை; பசைமம்
Adhesive stamp	-	ஒட்டுவில்லை
Adhoc	-	குறிப்பிட்ட ஒன்றிற்கென; அதற்கென அமைந்த; இடைக்கால; தனி நோக்கிற்கான
Adhoc Committee	-	தனிக் குழு; இடைக்காலக் குழு
Adhoc grant	-	இடைக்கால நல்கை
Adhoc Payment	-	தற்காலிகப் பணக் கொடுப்பு
Adhoc rules	-	தற்காலிக விதிகள்; அதற்கென அமைந்த விதிகள்; தனிவிதிகள்; அற்றைப் பணி நெறியீடு
Adjacent area	-	அண்மைப்பகுதி
Adjoin	-	அடுத்திரு; சார்ந்திரு
Adjourn	-	ஒத்தி வை
Adjourn Sine Die	-	நாள் குறிப்பிடாமல் ஒத்தி வை
Adjournment motion	-	ஒத்திவைப்புக் கோரிக்கை; ஒத்திவைப்புத் தீர்மானம்

Adjudge	-	தீர்ப்புக் கூறு; முடிவு செய்; உறுதிப்படுத்து
Adjudication	-	தீர்ப்பு
Adjudication Committee	-	தீர்ப்புக் குழு
Adjudicator	-	தீர்ப்பாளர்
Adjure	-	ஆணை உறுதிமொழியின்படி வழிப்படுத்து
Adjust	-	ஒழுங்காக்கு; சரிக்கட்டு; பொருத்திக்கொள்
Adjustable	-	தகவான; தகவமைக்கவல்ல
Adjusting Heads	-	(கணக்கைச்)சரிக்கட்டும் தலைப்புகள்
Adjustment	-	சரிப்படுத்தல்; சரிக்கட்டல்
Adjustment Bill	-	சரிக்கட்டல் பட்டி
Adjustment by transfer	-	மாற்றிச் சரிக்கட்டல்
Adjustment entries	-	சரிக்கட்டல் பதிவுகள்
Adjustment Register	-	சரிக்கட்டல் பதிவேடு
Administer	-	ஆட்சிசெய்; நிருவகி; செய்துவை
Administration	-	ஆட்சி; ஆளுகை; நிருவாகம் செலுத்துதல்; கொடுத்தல்
Administration of Estates	-	சொத்து ஆளுகை; உடைமை ஆளுகை; வளாக ஆளுகை
Administration of Justice	-	நீதி வழங்கல்; நீதி செலுத்துதல்
Administration of oath	-	உறுதிமொழி ஏற்கச் செய்தல்; பதவிப் பிரமாணம் செய்து வைத்தல்
Administration Report	-	ஆட்சி அறிக்கை
Administrative Authority	-	ஆட்சி அதிகாரி; ஆட்சி ஆணைக் குழு
Administrative Control	-	ஆட்சிக் கட்டுப்பாடு
Administrative Expenses	-	ஆட்சிச் செலவுகள்; நிருவாகச் செலவுகள்
Administrative Glossary	-	ஆட்சிச் சொல்லகராதி
Administrative Head	-	ஆட்சித் தலைவர்; நிருவாகத் தலைமை
Administrative Intelligence	-	ஆட்சி நுண்ணறிவு

Administrative Officer	-	ஆட்சி அலுவலர்; நிருவாக அலுவலர்
Administrative Power	-	ஆட்சி அதிகாரங்கள்
Administrative Sanction	-	ஆட்சிமுறை ஒப்பளிப்பு; நிருவாக ஒப்பளிப்பு
Administrative Section	-	ஆட்சிமுறைப் பிரிவு; நிருவாகப் பிரிவு
Administrative Tribunal	-	நிருவாகத் தீர்ப்பாயம்
Administrator	-	ஆட்சியாளர்; நிருவாகி
Administrator-General	-	பேராட்சியாளர்; தலைமை ஆட்சியாளர்
Admirable	-	அரிய; மெச்சத்தக்க; போற்றும் படியான
Admiralty	-	கடற்படைத் தலைமை; கடற்படை
Admire	-	போற்று; வியந்து பாராட்டு
Admiringly	-	புகழ்ச்சியாக
Admissibility	-	ஏற்கத்தகும் தன்மை; ஏற்கத்தக்க தன்மை
Admissible	-	ஏற்கத்தக்க; அனுமதிக்கத்தக்க
Admissible Allowances	-	உரிய/அனுமதிக்கத்தக்க படிகள்
Admission	-	நுழைவு; ஏற்றுக்கொள்ளுதல்; ஒப்புக் கொள்ளுதல்; ஏற்பு; சேர்க்கை; சேர்த்தல்; அனுமதித்தல்
Admission of Claim	-	உரிமைக் கோரிக்கை ஏற்பு
Admission Register	-	சேர்க்கைப் பதிவேடு
Admission to Bail	-	பிணை ஏற்பு; பிணை இசைவு
Admit	-	நுழையவிடு; ஏற்றுக்கொள்; சேர்த்துக்கொள்; ஒப்புக்கொள்
Admittedly	-	மறுப்புக்கிடமின்றி
Admix	-	கலவை; சேர்
Admixture	-	கலவை
Admonish	-	திட்டு ; வசைபாடு; எச்சரி; அறிவுறுத்து
Admonisher	-	அறிவுறுத்துபவர்; எச்சரிப்பவர்
Admonition	-	எச்சரிப்புரை; கடிந்துரை; நல்லறிவு புகட்டுதல்; நயமான கண்டிப்பு
Adolescence	-	இளந்தைப் பருவம்; வளரிளமை; விடலைப்பருவம்

Adolescent	-	இளமைப் பருவத்திலுள்ள
Adopt	-	தத்து எடு; மேற்கொள்; தனதாக்கு; தேர்ந்தெடு
Adopted	-	தத்தெடுக்கப்பட்ட
Adoptee	-	தத்தெடுக்கப்பட்டவர்
Adopter	-	தத்தெடுப்பவர்
Adoption	-	தத்து எடுத்தல்; தனதாக்குதல்; மேற்கொள்ளுதல்; தெரிவு
Adorable	-	வணங்கத் தகுந்த; பூசிக்கத் தகுந்த
Adore	-	வணங்கு; பக்தி செய்; மிக்க அன்பு செலுத்து; மிக்க மதிப்புக் கொடு
Adorn	-	அழகுபடுத்து; அணிசெய்
Adornment	-	அழகுபடுத்துதல்; அணி செய்தல்; ஒப்பனை செய்தல்
Adrift	-	அலையால் இழுத்துச் செல்லப்படு; பிணைப்பின்றி; அலைப்புண்டு
Adscript	-	பின்பு எழுதியுள்ள
Adult	-	அகவை முதிர்ந்தோர்; முதியோர்
Adult Education	-	முதியோர் கல்வி
Adult Franchise	-	உரிய வயதுவந்தோர் வாக்குரிமை
Adult Literacy	-	வயது வந்தோர் எழுத்தறிவு
Adult Population	-	வயது வந்தோர் மக்கள்தொகை
Adulteration	-	கலப்பு; கலப்படம்
Adultery	-	ஒழுக்கக் கேடு; கூடா ஒழுக்கம்
Aduterated	-	கலப்படம் செய்யப்பட்ட
Adumbrate	-	மேலோட்டமாக விவரி; கோடிட்டுக் காட்டு
Advance	-	முன்பணம்; முன்னேறு
Advance Collection	-	முன் தண்டல்
Advance Copy	-	முன் படி
Advance Register	-	முன்பணப் பதிவேடு
Advanced	-	முற்போக்கான; மேம்பட்ட
Advanced Kar	-	முன்கார்ப் பருவம்
Advancement	-	உயர்வு; மேம்பாடு; முன்னேற்றம்

Advantage	-	நன்மை; மேன்மை
Advent	-	வருகை; வந்தமை
Adventure	-	துணிவுச் செயல்; வீரச் செயல்; துணிகரச் செயல்
Adversary	-	எதிரி; பகைவர்
Adverse	-	எதிரான; கேடான
Adverse effect	-	எதிர் விளைவு
Adverse enjoyment	-	எதிர்நிலை நுகர்வு
Adverse possession	-	எதிர்நிலை உடைமை
Adverse remark	-	எதிரான குறிப்புரை
Adverse season	-	பாதகமான/கேடான பருவம்; தீங்கான பருவம்
Adverse title	-	எதிரான உரிமை; மாறான உரிமை
Adversity	-	இன்னல்; துன்பம்
Advertence	-	கவனம்; விழிப்பு
Advertise	-	விளம்பரப்படுத்து
Advertised vacancies	-	அறிவிக்கப்பட்ட காலியிடங்கள்
Advertisement	-	விளம்பரம்
Advice	-	அறிவுரை; நல்லுரை; அறவுரை
Advice Slip	-	அறிவிப்புச் சீட்டு
Advise	-	அறிவுரை கூறு; நல்லுரை கூறு
Adviser	-	அறிவுரையாளர்; கருத்துரையாளர்
Advisory	-	அறிவுரை கூறுகிற; அறிவுரை அடங்கிய
Advisory Board	-	அறிவுரைக் குழுமம்
Advisory Committee	-	அறிவுரைக் குழு
Advisory Memo	-	அறிவுரைக் குறிப்பு
Advocate	-	வழக்குரைஞர்
Advocate-General	-	மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்
Aegis	-	சார்பு; ஆதரவு செயலுக்குப் பிந்தைய எண்ணம்
Aerated Water	-	காற்றூட்டப்பட்ட நீர்
Aerial	-	வான்கம்பி; அலைவாங்கி
Aerial Encroachment	-	வான்வெளி வரைகடப்பு
Aerial Photographing	-	வான்வழிப் படப்பிடிப்பு

Aerial spray	-	வான்வழித் தெளிப்பு
Aerial survey	-	வான்வழி ஆய்வு
Aerodrome	-	வானூர்தி நிலையம்; விமானத் தளம்
Aerogram	-	வான்வழி அஞ்சல்
Aerometer	-	காற்று அளவி; வளிமானி
Aeronautical education	-	வானூர்தியியல் கல்வி
Aeronautics	-	வானூர்தி இயல்; வானூர்திக் கலை
Aeroplane	-	வானூர்தி; விமானம்
Aesthetic	-	அழகியல் சார்ந்த
Aesthetic arts	-	அழகியற் கலைகள்; கவின்கலை
Affair	-	அலுவல்; செயல்; நிகழ்ச்சி; நிலை; குறிப்பிடத்தக்க நடப்பு; பொதுவிவகாரம்
Affect	-	தாக்கம்
Affection	-	பாசம்; உள்ளன்பு; பற்று; ஆசை
Affidavit	-	ஆணை உறுதி ஆவணம்; ஆணை உறுதி வாக்குமூலம்
Affiliated	-	இணைக்கப்பெற்ற; சேர்க்கப்பெற்ற
Affiliation	-	இணைத்தல்; சேர்த்தல்
Affiliation fee	-	இணைப்புக் கட்டணம்
Affinity	-	உறவு; இன உறவு
Affirm	-	முறைப்படி அறிவி; வலியுறுத்திக் கூறு; உறுதி செய்
Affirmative	-	ஒப்புதலான; இசைவான
Affix	-	ஒட்டு; இணை; முன்னிணைப்பு; சேர்
Afflict	-	அல்லற்படுத்து; துயருறுத்து
Afflicted	-	அல்லற்பட்ட; துயருற்ற
Affluence	-	செழுமை; செல்வச் செழிப்பு
Afford	-	வாய்ப்பளி; இயலும் நிலையோடிரு
Afford facilities	-	இயலும் ஏந்து
Afforest	-	காடுவளர்
Afforestation	-	காடு வளர்ப்பு; காடு வளர்த்தல்

Affray	-	கலவரம்; அமைதிக்குலைவு; அமளி
Afield	-	களத்தில்
Afore	-	முன்பாக; முன்னால்; எதிரில்
Aforehand	-	முன்னதாக
Aforementioned	-	முற்கூறிய
Aforesaid	-	மேற்சொன்ன; முன்சொன்ன
Aforethought	-	முன் கருதப்பட்ட; முற்சிந்தனை; முற்கருத்து
Afresh	-	புதிதாக; மறுபடியும்; மீண்டும்
After all	-	எப்படியிருந்தாலும்
After careful consideration	-	கவனமாகக் கருதியபின்; கூர்ந்து ஆய்ந்தபின்/பரிசீலித்தபின்
After effects	-	பின்விளைவுகள்
After thought	-	பின் எண்ணம்; துணிந்த பின் எண்ணுதல்; செயலுக்குப் பிந்தைய எண்ணம்
After-care	-	பிற்காப்பு
After-care Home	-	பிற்காப்பகம்
Afternoon (P.M.)	-	பிற்பகல் (பி.ப.)
Aftershock	-	பின்னதிர்வு
Agate	-	ஒள்ளூரியம்; கடினமான ஒருவகைக் கல்; கடுங்கல்
Age	-	அகவை; வயது
Age group	-	அகவைப் பிரிவு; வயதுத் தொகுதி
Age limit	-	அகவை வரம்பு; வயது வரம்பு
Age Certificate	-	அகவை / வயதுச் சான்றிதழ்
Age of Discretion	-	தன்னறிவு அகவை
Ageing	-	முதுமையடைதல்; முதிர்ச்சி
Agency	-	முகவாண்மை; முகமை; முகவாண்மையகம்
Agenda	-	பொருள் நிரல்
Agent	-	முகவர்
Agent General	-	தலைமை முகவர்
Agent's Commission	-	முகவர் தரகு
Age-war	-	அகவைப்படியான

Aggravate - மேலும் கேடாக்கு; தீங்கைப் பெருக்கு; சினமூட்டு; சிக்கலாக்கு
Aggregate - மொத்தம்; திரள்
Aggregate Income - மொத்த வருவாய்
Aggregate indemnity - மொத்த ஈட்டுறுதி
Aggregate Value - மொத்த மதிப்பு
Aggregating - எல்லாம் சேர்த்து; மொத்தமாக
Aggression - வலுச்சண்டைக்குப் போதல்; வலியத் தீங்கு செய்தல்
Aggrieved - இடருற்ற; தீங்குற்ற; மனக்குறையுடைய
Agile - சுறுசுறுப்பான
Agio - நாணயமாற்றுத் தொகை
Agiotage - நாணயமாற்றுத் தொழில்
Agitate - கிளர்ச்சி செய்; போராடு; தூண்டி விடு; குழப்பம் செய்
Agitated - தூண்டப்பெற்ற
Agitation - கிளர்ச்சி; கலகம்
Ago - முன்பு; முற்காலத்தில்
Agoing - சென்றுகொண்டிருக்கிற
Agone - கழிந்த; கடந்த
Agony - நோவு; வருத்தம்; துன்பம்; துயரம்
Agrarian problem - வேளாண்மைச் சிக்கல்
Agrarian - வேளாண்மை தொடர்பான
Agree - இணங்கு; ஒப்புக்கொள்; உடன்படு
Agreeable - ஏற்றதான; இசைவான
Agreeableness - ஒத்திருக்கும் தன்மை
Agreed Pattern of Staff - ஒப்புதல் பெற்ற பணியாளர் தொகுதி
Agreed - ஒப்புக்கொள்ளப்பட்ட; ஏற்கப்பட்ட; இசைவளிக்கப்பட்ட
Agreement - இணக்கம்; உடன்படிக்கை
Agreement and contract - உடன்படிக்கையும் ஒப்பந்தமும்
Agreement Bond - உடன்படிக்கைப் பிணைமுறி
Agreement with Government - அரசுடன் இணக்கம்; அரசுடன் உடன்படிக்கை
Agricultural Calendar - வேளாண் (கால) அட்டவணை

Agricultural College	-	வேளாண் கல்லூரி
Agricultural Credit Society	-	வேளாண் கடன் வழங்கும் சங்கம்
Agricultural Demonstration	-	வேளாண் செயல்முறை விளக்கம்
Agricultural Depot	-	வேளாண் கிடங்கு
Agricultural Economics	-	வேளாண் பொருளியல்
Agricultural Experiments	-	வேளாண் ஆய்வுகள்
Agricultural Implements	-	வேளாண் கருவிகள்
Agricultural income	-	வேளாண் வருமானம்
Agricultural journal	-	வேளாண் செய்தியிதழ்
Agricultural Labour	-	வேளாண் தொழிலாளர்
Agricultural Loans	-	வேளாண் கடன்கள்
Agricultural Marketing Society	-	வேளாண்பொருள் விற்பனைச் சங்கம்
Agricultural Operations	-	வேளாண் செயற்பாடுகள்/ நடவடிக்கைகள்; வேளாண் பணிகள்
Agricultural Produce	-	வேளாண் விளைபொருள்
Agricultural Refinance Corporation	-	வேளாண் மறுநிதியுதவிக் கழகம்
Agricultural Research Station	-	வேளாண் ஆராய்ச்சி நிலையம்
Agricultural Society	-	வேளாண் சங்கம்
Agricultural Statistics	-	வேளாண் புள்ளி விவரம்
Agricultural Year	-	வேளாண் ஆண்டு; உழவாண்டு
Agriculture	-	உழவு; வேளாண்மை
Agriculturists' Debt Relief	-	உழவர் கடன் தணிப்பு; உழவர்கடன் இடருதவி
Agro centre	-	வேளாண் அங்காடி; வேளாண் மையம்; வேளாண் நடுவம்
Agro implements	-	வேளாண் துணைக் கருவிகள்
Agronomy	-	உழவுச் சூழலியல்
Ahead	-	முன்; முந்தி; தொடர்ந்து; மேலும்
Aid	-	உதவி
Aid and Abet	-	துணையும் தூண்டுதலும்
Aided School	-	உதவிபெறும் பள்ளி
Aide-De-Camp	-	ஆளுநரின் மெய்க்காப்பாளர்; உதவிப் படைத்தலைவர்
Ailment	-	நோய்; பிணி

Aim	-	நோக்கம்; குறிக்கோள்; இலக்கு
Aimless	-	இலக்கற்ற; குறிக்கோளற்ற
Aims and Objectives	-	நோக்கமும் குறிக்கோளும்
Air pollution	-	காற்றுத் தூய்மைக்கேடு; காற்று மாசு
Air taxi	-	வாடகை வானூர்தி
Airbase	-	வானூர்தித் தளம்
Airborne Disease	-	காற்றால் பரவும் நோய்
Airborne Trade	-	வான்வழி வணிகம்
Airbrake	-	காற்று நிறுத்தி; காற்றுத் தடை
Airbus	-	பெரும் வானூர்தி; வான்வழிப் பேருந்து
Air circulation	-	காற்றோட்டம்
Air-condition	-	சீர்வளி வசதி
Air-conditioned bus	-	சீர்வளி வசதிப் பேருந்து
Air-conditioned train	-	சீர்வளி வசதித் தொடர்வண்டி
Aircooler	-	காற்றுக் குளிரூட்டி; காற்றுக் குளிரி; காற்றுக்குளிர்ப்பி; வளிக்குளிரி
Aircraft	-	வானூர்தி
Airfield	-	வானூர்தித் தளம்
Airforce	-	வான்படை
Airhostess	-	வானூர்திப் பணிப்பெண்; விமானப் பணிப்பெண்
Airlift	-	வான்வழி எடுத்துச் செல்லல்
Airmail	-	வானஞ்சல்
Airport	-	வானூர்தி நிலையம்; விமான நிலையம்
Airraid	-	வான்வழித் தாக்குதல்
Airtight	-	காற்றுப் புகா
Airways	-	வான்வழிப் போக்குவரத்து
Airworthiness	-	பறக்கும் தகுதி
Airy	-	காற்றோட்டமுள்ள
Akin	-	ஒத்த தன்மையுள்ள; குருதித் தொடர்புடைய
Alarm	-	இடர் எச்சரிக்கை ஒலி

Alarm Clock - விழிப்பொலிக் கடிகாரம்; எழுப்பு மணிப்பொறி

Alarm Time piece - விழிப்பொலியன்; அலறும் கடிகாரம்; ஒலியெழுப்பும் கடிகாரம்; அலறி

Alarming - எச்சரிக்கை தருகிற

Alarming Report - எச்சரிக்கை அறிக்கை; கவலையளிக்கும் அறிக்கை

Alas - அந்தோ! ஐயகோ! ஐயோ!

Album - இசைத் தொகுப்பு; திரட்டு வைப்பேடு; தொகுப்பு; படத்தொகுப்பு

Alchemic - இரசவாதம் தொடர்பான

Alchemist - இரசவாதி

Alcohol - வெறியம்; மதுவகை

Alcohol Industry - மதுத் தொழிற்சாலை; சாராய ஆலை

Alcoholic - சாராயம் சார்ந்த

Alert - விழிப்பான

Algebra - குறிக் கணக்கியல்

Alias - மறுபெயர்; மறுபெயராக

Alibi - ஒரு நிகழ்வின்போது வேறிடத்தில் இருத்தல் ; வேறிடத்தில் இருத்தல் குறித்த சான்று

Alien - அயலார்; வெளியார்

Alien's branch - வெளிநாட்டுக் கிளை

Alienable Right - உடைமை மாற்றத்தக்க உரிமை

Alienate - உடைமை மாற்று; மனமுறிவு கொள்

Alienation - உடைமை மாற்றல்; கைமாற்றல்

Alienation of land - நில உரிமை மாற்றல்

Alienation of Revenue - நிலவரி வருவாயை (வேறொருவருக்கு) மாற்றித் தருதல்

Alight - இறங்கு

Align - வரிசைப்படுத்து; ஒழுங்குபடுத்து

Aligned - வரிசைப்படுத்தப்பட்ட

Alignment	-	வரிசைப்படுத்துதல்; வரிசை
Alike	-	போன்ற; ஒத்த
Almighty	-	அனைத்து வல்லமை பொருந்திய; எல்லாம் வல்ல; இறை
Alimony	-	வாழ்க்கைப் படி
Aliquot	-	சரி ஈவான
Alive	-	உயிருடன்; துடிப்புணர்வுடன்
All along	-	எப்போதும்; தொடக்கமுதல் முடிவு வரை
All in all	-	முழு நிறைவாக; முழுவதுமாக; எல்லாமாக; அனைத்துமாக; முழு ஈடுபாடு
All India Level	-	அனைத்திந்திய நிலை
All India Service	-	அனைத்திந்தியப் பணி
All over	-	எங்கும்; முழுவதும்
All	-	எல்லாம்; அனைத்தும்
Allay	-	குறைப்பு ; தணிப்பு; நீக்கல்; தவிர்த்தல்
Allegation	-	சாட்டுரை; குறைகூறல்
Alleged disparity	-	சாட்டிய முரண்பாடு; சாட்டிய வேறுபாடு
Alleged Right	-	எடுத்துச் சொல்லப்படுகின்ற உரிமை; இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்ற உரிமை
Allegiance	-	கடப்பாடு; பற்றுறுதி
Allergy	-	ஒவ்வாமை
Alleviate	-	தணி; குறை; மட்டுப்படுத்து; நீக்கு
Alley	-	சந்து; குறுந்தெரு
Alliance	-	திருமண உறவு; ஒப்பந்தம்
Allied Trade	-	தொடர்புடைய வணிகம்
Allied	-	தொடர்புடைய
Allies	-	நேச நாடுகள்; நட்பு நாடுகள்
Allocate	-	பங்கீடு செய்; பிரித்துக் கொடு
Allocated	-	பங்கிடப்பட்டுள்ள
Allocation	-	ஒதுக்கீடு
Allocation of Fund	-	நிதி ஒதுக்கீடு

Allocation of Seat	-	இட ஒதுக்கீடு
Allocation	-	பங்கீடு; ஒதுக்கீடு
Allopathy	-	ஆங்கில மருத்துவம்
Allot	-	பங்கிட்டளி; ஒதுக்கு
Allotment	-	பங்கீடு; ஒதுக்கீடு
Allotment Register	-	பங்கீட்டுப் பதிவேடு
Allotted	-	ஒதுக்கிய
Allottee	-	ஒதுக்கீடு பெறுபவர்
Allotter	-	ஒதுக்கீடு செய்பவர்; ஒதுக்கீடு தருபவர்
Allow	-	இசைவளி; ஒத்துக்கொள்
Allowance	-	படி
Allowed	-	ஏற்கப்பட்ட
Alloy Metal	-	கனிமக் கலவை; மாழைக் கலவை
Alloy	-	கலப்பு மாழை
Allude	-	மறைமுகமாகக் குறிப்பிடு
Allusion	-	மறைமுகக் குறிப்பு
Allusive	-	குறிப்புமொழி; பிறிது மொழிதல்
Allusively	-	குறிப்பாக; சாடையாக
Alluvial soil	-	வண்டல் மண்
Ally	-	நட்பு நாடு; நண்பர்
Almanac	-	ஆண்டு நிகழ்வறிக்கை
Almirah	-	நிலைப்பேழை
Almond	-	பாதாம்பருப்பு; கற்பழவிதை
Almost	-	சற்றேறக்குறைய; பெரும்பாலும்
Alms	-	இரப்பு
Alms House	-	இரவலர் இல்லம்
Alone	-	தன்னந்தனியாக
Along	-	நெடுக; உடனாக
Along side	-	அருகருகே; அடுத்தடுத்த
Aloof	-	தள்ளி; தொலைவில்; பற்றின்றி; தனித்து
Aloud	-	உரக்க
Alpha System of filing	-	அகரமுதலிக் கோப்பு முறை
Alphabet	-	எழுத்துத் தொகுதி; அகரவரிசை நெடுங்கணக்கு

Alphabetic order	-	அகரவரிசை
Alphabetical	-	அகரவரிசையான
Alphabetical List	-	அகரவரிசைப் பட்டியல்
Alphabetical Order	-	அகரவரிசை
Alphabetically	-	அகரமுதலாக
Already	-	ஏற்கெனவே
Also	-	கூட; மேலும்
Alter	-	மாற்று; திருத்தியமை
Alterable	-	மாற்றக்கூடிய; திருத்தக்கூடிய
Alteration Memo	-	மாற்றக் குறிப்பு
Alteration	-	மாற்றம்; மாறுபாடு; மாறுதல்
Altercation	-	வாய்ச்சண்டை
Altered	-	மாற்றப்பட்ட
Alternate	-	ஒன்றுவிட்டு ஒன்றான
Alternative	-	மாற்று வழி
Alternative Charge	-	மாற்றுக் குற்றச்சாட்டு
Alternative Occupation	-	மாற்றுத் தொழில்
Alternative Vote	-	ஒற்றைமாற்று வாக்கு
Alternatively	-	மாற்றுத்தேர்வாக; முறைப்படி
Although	-	இருந்தபோதிலும்; ஆயினும்
Altitude	-	குத்துயரம்
Altogether	-	முழுமை; ஒருங்குசேர்ந்து
Alumni	-	பழைய மாணவர்
Amalgamate	-	இணை; ஒன்றாக்கு; ஒன்றிணை
Amalgamated	-	ஒன்றிணைக்கப்பட்ட
Amalgamation	-	ஒருங்கிணைப்பு
Amass	-	பேரளவில் சேர்; குவி; திரட்டு
Amateur	-	தொழில்சாராக் கலைஞன்
Amateurish	-	தேர்ச்சியற்ற
Amazement	-	திகைப்பு; வியப்பு
Ambassador	-	தூதர்; நாட்டின் பேராளர்
Ambiguous	-	பொருள் தெளிவற்ற; ஐயப்பாட்டிற்கு இடமான
Ambiguously	-	தெளிவற்ற வகையில்
Ambit	-	சுற்றெல்லை
Ambition	-	பேராவல்; பேரவா

Ambitious	-	பேரவாவுள்ள; பெருங்குறிக்கோள் உள்ள
Ambulance	-	நோயாளர் ஊர்தி
Ameliorate	-	சீராக்கு; சீராகு; தணி
Amenable	-	இணங்கத்தக்க
Amend	-	சீர்ப்படுத்து; திருத்தம் செய்
Amendment of Act	-	சட்டத்திருத்தம்
Amendment	-	திருத்தம்; சீரமைப்பு
Amenities	-	ஏந்துகள்
Amicable	-	நட்பிணக்கமான
Amid; Amidst	-	இடையில்
Amina	-	நிறைவேற்றுநர்
Amity	-	நட்பு; நட்புறவு
Ammunition	-	படைத்தளவாடம்; வெடி மருந்துக் குண்டு
Amnesia	-	நினைவுமறதி நோய்; நினைவாற்றல் இழப்பு; மூப்பு மறதி நோய்
Amnesty	-	பொது மன்னிப்பு
Among; amongst	-	இடையில்; ஊடே
Amount	-	தொகை; அளவு
Amount billed	-	பட்டியல் தொகை
Amount to be billed	-	பட்டியல் போடுவதற்குரிய தொகை
Amplification	-	விரிவாக்கம்
Amplifier	-	பெருக்கி
Amplify	-	பெருக்கு
Amputate	-	துண்டி
Amusement	-	வேடிக்கை; பொழுதுபோக்கு; நகைக்கூட்டம்; பொங்கு உவகை
Anachronism	-	காலத்திற்கு ஒவ்வாமை; கால முரண்பாடு
Anaemia	-	சோகை; குருதிக் குறைவு; வெளிறிய தோற்றம்
Analogue	-	ஒப்புவமை; முற்றுவமைத்தன்மை
Analogy	-	ஒப்புமை

Analyse	-	பகுத்தாய்; பாகுபடுத்து
Analysed	-	பகுத்தாய்ந்த
Analysed observation report	-	பகுப்பாய்வு நோக்கு அறிக்கை
Analyser	-	பகுத்தாய்பவர்; பகுப்பாய்நர்
Analysis	-	பகுப்பு; பகுப்பாய்வு
Analysis of Soil	-	மண் பகுப்பாய்வு
Analyst	-	பகுப்பாய்நர்
Analytical	-	பகுப்பாய்வு சார்ந்த
Analytical chemistry	-	வேதியியல் பகுப்பாய்வு
Anarchy	-	அரசழிவு; ஆட்சிக் குலைவு; இறைமுறையின்மை
Anatomy	-	உடற்கூற்றியல்
Ancestor	-	முன்னோர்
Ancestral Property	-	முன்னோர் சொத்து
Ancestry	-	மரபுவழி
Anchor	-	நங்கூரம்; பற்றுக்கோடு
Ancient	-	தொன்மையான; பண்டைய
Ancient document	-	தொல்லேடு; தொல்லாவணம்
Ancient monuments	-	பண்டைய நினைவுச் சின்னங்கள்
Ancient remains	-	தொல்லியல் எச்சங்கள்
Ancient writings	-	பண்டைய எழுத்தாவணங்கள்
Ancillary industries	-	துணைத் தொழில்கள்
Ancillary and remains	-	துணை; துணையான; எஞ்சியுள்ளவை
Ancillary units	-	துணையலகுகள்; துணைப் பிரிவுகள்
Anesthetic	-	மயக்க மருந்து
Anguish	-	கடுந்துயர்; பெருந்துன்பம்
Anima Meter	-	காற்று வேக அளவி
Animal	-	விலங்கு
Animal Husbandry	-	கால்நடைப் பேணுகை
Animal Manure	-	கால்நடை எரு
Animosity	-	பகைமை; கடும் வெறுப்பு
Annals	-	ஆண்டுக் குறிப்பு வரலாறு;

வரலாற்றுப் பதிவேடுகள்

Annex - பின் சேர்; பின் இணை

Annexe - பிற்சேர்க்கை; இணைப்பு

Annexure - பிற்சேர்க்கை; பின்னிணைப்பு

Anniversary - ஆண்டு விழா; ஆண்டு நிறைவு

Anno Domini (A.D.) - கிறித்துவுக்குப் பின்(கி.பி.)

Announce - அறிவி; தெரிவி; பொது அறிவிப்புச் செய்

Announcement - அறிவிப்பு

Annoyance - தொல்லை; எரிச்சல்

Annual Audit - ஆண்டுத் தணிக்கை

Annual Balance Sheet - ஆண்டு இருப்புநிலைக் குறிப்பு; ஆண்டு ஐந்தொகைக் குறிப்பு

Annual Establishment List - பணியாளர் ஆண்டுப் பட்டியல்

Annual Establishment Return - பணியாளர் ஆண்டு விவர அறிக்கை

Annual Financial Statement - ஆண்டு நிதிநிலை அறிக்கை

Annual increment - ஆண்டு ஊதிய உயர்வு

Annual Programme of work - ஆண்டு வேலைத் திட்டம்

Annual Report - ஆண்டறிக்கை

Annual verification of stock - ஆண்டு இருப்புச் சரிபார்ப்பு

Annual - ஆண்டுக்குரிய; ஆண்டுதோறும்

Annually - ஆண்டுதோறும்

Annuity - ஆண்டுத் தொகை

Annuity Deposit - ஆண்டு வைப்புத்தொகை

Annulment - நீக்கல்; ஒழிப்பு

Anomalous position - ஒழுங்கிலா நிலைமை

Anomaly - பொருந்தாமை; ஒழுங்கின்மை; முரண்பாடு

Anonymous - எழுதியவர் பெயர் இல்லாத

Answer - விடை

Answerable - பொறுப்புள்ள; விடையளிக்க வேண்டிய

Antagonism - எதிர்ப்பு; பகைமை

Antagonize - எதிரியாக்கு; எதிர்ப்பைத் தூண்டு

Ante - முன்னால்; மேலே

Ante meridian (A.M.) - முற்பகல்

Ante natal	-	மகப்பேற்றுக்கு முந்தைய
Antecedence	-	முந்திய நிலை
Antecedent	-	முந்திய நிகழ்ச்சி
Antedated cheque	-	முன் நாளிட்ட காசோலை
Antedated	-	முன் நாளிட்ட
Antenna	-	உணர் கம்பி; வானலை வாங்கி; வான்கம்பி
Anthology	-	பாடல் திரட்டு; தொகை நூல்
Anthropology	-	மானிடவியல்; மாந்தவியல்
Antibiotic	-	நுண்ணுயிர்க் கொல்லி
Anticipate	-	எதிர்பார்; எதிர்நோக்கு
Anticipated or Presumptive value	-	எதிர்பார்க்கும் அல்லது உய்த்தறியும் மதிப்பு
Anticipated Revenue	-	எதிர்பார்க்கும் வருவாய்
Anticipatory	-	எதிர்பார்க்கிற; முன்னான
Anticibatory bail	-	முன் பிணை
Anti-Clockwise	-	இடஞ்சுழித்த; இடமிருந்து வலமாகச் சுற்றிவரும்
Anti-corruption	-	ஊழல் தடுப்பு
Anti-cyclone	-	எதிர் சுழற்காற்று
Antidote	-	நச்சுமுறிவு
Anti-drink committee	-	மதுவிலக்குக் குழு
Anti-goverment Propaganda	-	அரசெதிர் பரப்புரை
Antimalarial Measure	-	முறைக்காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள்
Antinomy	-	சட்டமுரண்; அறமுரண்; முரணுரை
Antipathy	-	வெறுப்பு
Antiquarian	-	தொல்பொருள் திரட்டாளர்
Antique	-	பண்டைய; தொன்மையான; பழைமையான
Antiquities	-	பழைமைச் சின்னங்கள்; தொன்மை நடைமுறைகள்; தொல்பொருள்கள்
Antiquity	-	தொன்மை

Anti-Rabic Treatment	-	வெறிவிலங்குக்கடி மருத்துவம்; நாய்க்கடி நச்சுமுறிவு மருத்துவம்; வெறிநாய்க்கடி நோய் மருத்துவம்
Anti-sabotage Check	-	திடீர் அழிவுத் தடுப்பு; சதிச்செயலுக்கு எதிரான சோதனை
Antiseptic	-	நோய் நுண்மத்தடை; நச்சுத்தடை; எதிர்நச்சு
Antisocial movement	-	வாழ்வியற் பகை இயக்கம்; சமூக நலனுக்கு எதிரான இயக்கம்
Anvil	-	பட்டறைக் கல்; பட்டடை; அடைகல்
Anxiety	-	ஆவல்; கவலை
Anxious	-	கவலைகொண்ட; ஆர்வமுள்ள
Anxiously	-	கவலையுடன்; ஆவலுடன்
Any	-	ஏதாவது
Anybody	-	எவ்ரேனும் ஒருவர்
Anyhow	-	எப்படியோ ஒரு வகையில்; எது எப்படியானாலும்; எவ்வாறாயினும்
Anyone	-	எவராயினும் ஒருவர்
Anything	-	ஏதேனும் ஒன்று
Anytime	-	எந்நேரத்திலும்
Anyway	-	எப்படியும்; எவ்வழியிலேனும்
Anywhere	-	எங்கேனும்
Apart	-	நீங்கலாக; தனியாக
Apartheid(Policy)	-	தீண்டாமை; இனத்தாழ்மை; இனத்தாழ்ச்சி; இனவெறி (கொள்கை)
Apartment	-	அடுக்ககம்; அடுக்குக் குடியிருப்பு
Apathy	-	உணர்ச்சியின்மை; பற்றின்மை; அக்கறையின்மை; ஈடுபாடின்மை
Aperture	-	துளை; இடைவெளி
Apex	-	உச்சி; தலைமை
Apiary	-	தேனீப் பண்ணை
Apiculture	-	தேனீ வளர்ப்பு
Apiece	-	ஒவ்வொருவருக்கும்; ஒவ்வொன்றுக்கும்; தனித்தனியாக

Apologetic	-	மன்னிக்கத்தக்க
Apologize	-	மன்னிப்புக் கேள்
Apology	-	மன்னிப்புக்கோருதல்; செய்ததற்கு வருந்துதல்
Appalling	-	மலைக்க வைக்கிற; அச்சுறுத்துகிற
Apparatus	-	செய்கருவி; துணைக்கருவி; வினைக்கருவி
Apparent	-	தெளிவான; வெளிப்படையான
Apparently	-	தெளிவாக; வெளிப்படையாக
Appeal	-	மேல் முறையீடு; மேல் வழக்காடு; வேண்டுகோள் விடு
Appeal Against Acquittal	-	விடுவித்தலுக்கு எதிரான; விடுதலைக்கு எதிரான மேல்முறையீடு
Appeal Claim	-	மேல் முறையீட்டுரிமை
Appeal petition	-	மேல் முறையீட்டு மனு
Appeal suit	-	உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு
Appealing	-	கவர்ச்சியுடைய; மனத்தைத் தொடுகிற
Appealingly	-	மனத்தைக் கவரும் வகையில்
Appear	-	வந்திரு; முன்னிலையாகு; தோன்று
Appearance	-	தோற்றம்; வெளித்தோற்றம்; வருகை தரல்
Appease	-	தணி; அமைதிப்படுத்து
Appellant	-	மேல் முறையீட்டாளர்
Appellate	-	மேல் முறையீட்டுக்குரிய; மேல் முறையீடு தொடர்பான
Appellate Authority	-	மேல் முறையீட்டதிகாரி; மேல் முறையீட்டு ஆணையாளர்; மேல் முறையீட்டுத் தகவாளர்
Appellate Jurisdiction	-	மேல் முறையீட்டு ஆட்சி வரம்பு / அதிகார வரம்பு
Appellate Tribunal	-	மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்
Appellation	-	பெயர்; தலைப்பு; சொல்

Append	-	இணை
Appendage	-	இணைப்பு; பின்சேர்ப்பு
Appended	-	இணைத்துள்ள; சேர்த்துள்ள
Appendix	-	பின்னிணைப்பு; பிற்சேர்க்கை
Applause	-	ஆரவாரப் பாராட்டு
Appliances	-	துணைக் கருவிகள்
Applicability	-	பயன்பாட்டுத் தகுதி
Applicable	-	பொருந்தக்கூடிய
Applicant	-	விண்ணப்பிப்பவர்
Application	-	விண்ணப்பம்; செயற்படுத்தல்
Application for Licence	-	உரிம விண்ணப்பம்
Application Form	-	விண்ணப்பப் படிவம்
Applied Nutrition Programme	-	செயல்முறை ஊட்ட உணவுத் திட்டம்
Applied Science	-	செயல்முறை அறிவியல்
Applied	-	செயல்முறை சார்ந்த
Apply	-	இடு; கருத்தூன்று; விண்ணப்பி; செயற்படுத்து
Appoint	-	பணியில் அமர்த்து
Appointed	-	அமர்த்தப்பட்ட
Appointed by transfer	-	மாற்றலால் அமர்த்தப்பெற்ற
Appointee	-	தெரிவு செய்யப்பட்டவர்
Appointer	-	பணிக்கு அமர்த்தம் செய்பவர்
Appointing Authority	-	பணியமர்த்த அலுவலர்
Appointment	-	அலுவல்; வேலை நியமனம்; பணியமர்த்தல்; சந்திப்புத் திட்டம்; செவ்வி
Appointment by selection	-	தெரிவுவழி பணி அமர்த்தம்; தெரிவமர்த்தம்
Appointment Committee	-	பணியமர்த்தக் குழு; நியமனக் குழு
Appointment Order	-	பணியமர்த்தாணை; நியமன ஆணை
Apportion	-	பகுத்துக் கொடு; பங்கீடு செய்
Apportioned	-	பிரிக்கப்பட்ட
Apportionment	-	பிரித்துக் கொடுத்தல்

Appraisal	-	விலை மதிப்பீடு
Appraise	-	மதிப்பீடு; கணித்துக் கூறு
Appraisement	-	விலை மதிப்பீடு
Appraiser	-	மதிப்பீட்டாளர்
Appreciable	-	பாராட்டத்தக்க; மதிக்கத்தக்க
Appreciate	-	பாராட்டு
Appreciation	-	உணர்ந்து பாராட்டுதல்; புகழ்ச்சி
Apprehend	-	கைப்பற்று; உணர்; ஐயுற்று அஞ்சு
Apprehension	-	அச்சம்; கைப்பற்றல்
Apprentice	-	தொழில் பழகுநர்; பயிற்சி மாணவர்; பணி பயிலுநர்
Apprenticeship	-	தொழில் பழகு பருவம்; பழகுநிலை; பயில்நிலை
Apprise	-	அறிவி; தெரிவி
Approach Road	-	அணுகுசாலை
Approach	-	அணுகு; காணுமுறை
Approachable	-	அணுகத்தக்க; அடையத்தக்க
Approbation	-	ஒப்புதல்; ஏற்பு
Appropriate	-	உரிய; பொருத்தமான
Appropriation Account	-	பொருத்தமான கணக்கு; பயன் ஒதுக்கீட்டுக் கணக்கு
Appropriation Bill	-	நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு
Appropriation	-	ஒதுக்கீடு; நிதி ஒதுக்கம்
Appropriator	-	ஒதுக்கீடு செய்பவர்
Approval	-	ஏற்பு; ஒப்புதல்
Approve	-	ஏற்றுக்கொள்
Approved book	-	ஏற்கப்பட்ட நூல்
Approved candidate	-	ஏற்கப்பெற்ற வேட்பாளர்
Approved list	-	ஏற்கப்பெற்ற பட்டியல்
Approved probationer	-	தகுதிகாண்பருவம் நிறைவு பெற்றவர்
Approved school	-	ஏற்பிசைவு பெற்ற பள்ளி
Approved	-	ஏற்கப்பட்ட
Approver	-	குற்றம் ஏற்ற சான்றாளர்
Approver's evidence	-	குற்றம் ஏற்றவரின் சான்று
Approximate	-	ஏறத்தாழ

Approximation	-	நெருங்கி இருக்கச் செய்தல்
Apprehended	-	பிடிக்கப்பட்ட ; தளைப்பட்ட
Apropos	-	ஒருவரைச் சார்ந்த பொருள் தொடர்பாக
Apt	-	பொருத்தமான
Aptitude	-	இயற்கைப் பாங்கு; உளச்சார்பு; நாட்டம்; திறனறிதல்
Aptitude Test	-	உளச் சார்புத் தேர்வு, விருப்பம் / நாட்டம் குறித்த தேர்வு; திறனறித்தேர்வு
Aptly	-	தக்க விதமாக; பொருத்தமாக
Aqua	-	நீர்
Aquarium	-	நீர்வாழ் உயிரினக் காட்சியகம்
Aquatic plants	-	நீர்த் திணைகள்; நீர்ப்பயிரிகள்
Aquatic	-	நீர்வாழ் ; நீர் தொடர்பான
Arable land	-	பயிரிடத்தக்க நிலம்
Arbiter	-	நடுவர்
Arbitrary	-	நெறியின்றி; மனப்போக்கான; தன்னெண்ணப்படி; தன்னிச்சையான
Arbitrate	-	தீர்ப்பளி
Arbitration	-	நடுவர் தீர்ப்பு; இசைவுத் தீர்ப்புமுறை
Arbitrator	-	நடுவர்; இசைவுத் தீர்ப்பாளர்
Arboriculture	-	மர வளர்ப்புக் கலை
Arch	-	வளைவு
Arch Pattern	-	வில் வடிவம்
Archaeological	-	தொல்லியல் சார்ந்த
Archaeological Remains	-	தொல்லியல் எச்சங்கள்
Archaeological Site	-	தொல்லியல் ஆய்வுக்களம்
Archaeologist	-	தொல்லியல் வல்லுநர்
Archaeology	-	தொல்லியல்
Archaic	-	பண்டைய
Archer	-	வில்லாளி
Archery	-	வில்வித்தை
Archives	-	ஆவணங்கள்; ஆவணக் காப்பகம்

Architect	-	கட்டடக் கலைஞர்
Architecture	-	கட்டடக் கலை
Archway	-	தோரணவாயில்
Ardency	-	புத்துணர்ச்சி; ஆர்வம்
Ardent	-	ஆர்வமிக்க
Ardently	-	புத்துணர்வுடன்; ஆர்வமொடு
Arduous	-	கடினமான
Area	-	பரப்பு; பரப்பளவு
Area Committee	-	பகுதிக் குழு
Area of Operation	-	செயற்பாட்டுப் பகுதி
Arena	-	களரி; செயற்களம்
Argue	-	எதிராடு; தருக்கம்செய்; வாதிடு
Argument	-	வழக்குரைத்தல்
Arid	-	வரண்ட
Aright	-	நேராக; சரியான முறையில்
Arise	-	கண்ணுக்குப் புலப்படு; தோன்று
Arising current	-	தொடங்கு தாள்
Aristocracy	-	உயர்மக்கள் ஆட்சி
Aristocrat	-	உயர் செல்வமக்கள்
Arithmetic	-	எண் கணக்கு
Arithmetical	-	கணிதத் தொடர்பான
Arithmetician	-	கணித வல்லுநர்
Armada	-	கப்பற்படை; கடற்படை
Armament	-	போர்க்கருவிகள்
Armed Force	-	ஆயுதப் படை; கருவியேந்திய படை
Armed Reserve Police	-	கருவிப்படைக் காவலர்
Armed	-	படைக்கலம் கொண்ட
Armistice	-	போரிடை ஓய்வு
Armour	-	கவசம்; காப்புறை
Armourer	-	படைக்கலன் ஆக்குநர்; கவசம் உருவாக்குநர்
Armoury	-	படைக்கலக் கொட்டில்
Arms	-	படைக்கலம்
Arms Act	-	படைக்கலச் சட்டம்

Arms and Ammunitions	-	போர்க்கருவிகளும் தளவாடங்களும்; ஆயுதங்களும் வெடிமருந்துகளும்
Arms Licence	-	படைக்கல உரிமம்
Army	-	படை
Around	-	சுற்றி; சூழ
Arrack	-	சாராயம்; வெறிநீர்
Arraignment	-	குற்றஞ்சாட்டுதல்; குற்றஞ்சாற்றுதல்
Arrange	-	ஏற்பாடு செய்; சீர்ப்படுத்து; நிரல்படுத்து
Arranged	-	ஏற்பாடு செய்யப்பட்ட
Arrangement	-	ஏற்பாடு
Arrear	-	நிலுவை
Arrear Bill	-	நிலுவைப் பட்டி
Arrear Claim	-	நிலுவைக் கோரிக்கை; நிலுவைக் கேட்புரிமை
Arrear Collection	-	நிலுவைத் தண்டல்
Arrear List	-	நிலுவைப் பட்டியல்
Arrears of Pay	-	சம்பள நிலுவை
Arrears of Pension	-	ஓய்வூதிய நிலுவை
Arrest	-	தளை செய்; தடுத்து நிறுத்து
Arrest and Detention	-	தளை செய்து காப்பில் வைத்தல்
Arrest Warrant	-	தளை செய்வதற்கான பற்றாணை; பிடியாணை
Arrest without warrant	-	பிடியாணையில்லாத் தளை
Arrested	-	தளை செய்யப்பட்ட; தடுக்கப்பட்ட
Arrestee	-	தளை செய்யப்பட்டவர்
Arrester/Arrestor	-	தளை செய்பவர்; தடுப்பவர்
Arrival	-	வருகை
Arrived	-	வந்தடைந்த; வந்திருக்கிற
Arrogance	-	இறுமாப்பு; அகந்தை
Arrogant	-	பிடிவாதமான; முரட்டுத்தனமான
Arrogantly	-	முரட்டுத்தனமாக
Arrow mark	-	அம்புக்குறி
Arrow	-	அம்பு

Arsenal	-	படைக்கலக் கிடங்கு; படைக்கலச் சாலை; படையகம்
Arson	-	தீ வைப்பு; எரியூட்டல்
Art	-	கலை
Art Gallery	-	கலைக்கூடம்
Art Paper	-	வழவழப்புத் தாள்; கலைத் தாள்
Artesian Well	-	ஊற்றுக் கிணறு
Article	-	பொருள்; பண்டம்; சரக்கு; கட்டுரை; பிரிவுக் கூறு
Article of Constitution	-	அரசமைப்புச் சட்டப்பிரிவுக் கூறு
Articles of agreement	-	உடன்பாட்டு விதிகள்; ஒப்பந்த நெறிமுறைகள்
Articles of Association	-	சங்க அமைப்பு விதிகள்; அமைப்பு நெறிமுறைகள்
Articles of Partnership	-	கூட்டாண்மை விதிகள்
Articles of Peace	-	அமைதிக்கான ஒப்பந்த விதிகள்
Articles of War	-	போர் விதிகள்; போர் நெறிமுறைகள்
Artificer	-	கைவினைஞர்
Artificial	-	செயற்கையான; போலியான
Artificial Feeding	-	செயற்கை முறை ஊட்டல்
Artificial Insemination	-	செயற்கைக் கருவூட்டல்
Artificial Insemination Centre	-	செயற்கைக் கருவூட்டு நிலையம் (கால்நடை)
Artisan	-	கைவினைஞர்; கைத்திறத் தொழிலாளர்; கம்மியர்
Artisan Inams	-	கைவினைஞர் நல்கை
Artisan plot	-	சிறுமனை; குறுமனை; கைம்மனை
Artisans and Agriculturists	-	கைவினைஞரும் உழவரும்
Artistic work	-	கலைத்திறம் வாய்ந்த வேலை
Artists	-	கலைத் தொழிலர்; நடிகர்; பாடகர்; கலைஞர்; ஓவியர்
Arts and Crafts	-	கலையும் கைத்தொழிலும்
Arts College	-	கலைக் கல்லூரி
As	-	போல
As a matter of fact	-	உள்ளபடியாக
As a matter of policy	-	கோட்பாட்டின்படி
As a matter of principle	-	கொள்கையின்படி

As a rule	-	நடைமுறையின்படி; வழக்கப்படி; விதிப்படி
As a special case	-	தனி நேர்வாக
As and when required	-	தேவைப்பட்டபோதெல்லாம்
As applicable to him	-	அவருக்குப் பொருந்துமாறு
As contemplated in Government order	-	அரசாணையின் கருத்துப்படி
As detailed below	-	பின் விளக்கியுள்ளவாறு
As for instance	-	சான்றாக
As on date	-	அன்றைய நாளில்
As soon as	-	விரைவில்
As stated above	-	மேற்சொன்னபடி; மேற்கண்டவாறு
As the case may be	-	நேர்வுக்கேற்ப; நிலைக்கேற்ப
As usual	-	வழக்கம்போல; எப்போதும்போல
As yet	-	இதுவரை; இன்றுவரை
Asbestos	-	கல்நார்
Ascend	-	ஏற்றம்; ஏறு; முன்னேறு
Ascendant	-	முன்னோர்; மூதாதையர்
Ascent	-	ஏற்ற தளம், உயர்ந்து செல்லல்
Ascertain	-	உறுதியாய் அறி; உறுதிப்படுத்து
Ascertained	-	உறுதிப்படுத்தப்பட்ட
Ascribe	-	சாட்டியுரை; குறித்துக் காட்டு
Ash	-	சாம்பல்
Ash Tray	-	சாம்பற்படிக்கம்; சாம்பல்தட்டம்; புகைத்தட்டம்
Ashamed	-	தலைகுனிவான; வெட்கிய
Aside	-	தள்ளி; அப்பால்; தனிமையில்
Aspect	-	நோக்கம்; பார்வை; தன்மை
Aspersion	-	பழிதூற்றுதல்; அவதூறு
Aspiration	-	குறியார்வம்; பேரார்வம்
Assassinator	-	கொலையாளி
Assassination	-	வன்கொலை
Assault	-	வலிந்து தாக்குதல்
Assemble	-	ஒன்று கூடு; ஒன்று கூட்டு; திரட்டு; ஒன்றுசேர்

Assembled	-	ஒன்றுசேர்த்த; ஒன்றிணைந்த
Assembly	-	பேரவை
Assembly Constituency	-	சட்டப்பேரவைத் தொகுதி
Assent to Bill	-	சட்ட வரைவிற்கு இசைவு
Assents	-	ஒப்புதல்; இசைவு
Assert	-	உறுதியாகக் கூறு; நிலைநாட்டு
Assess	-	மதிப்பீடு செய்; வரிசுமத்து
Assessable	-	மதிப்பிடத்தக்க
Assessed	-	மதிப்பிடப்பட்ட
Assessee	-	வரி விதிப்புக்குரியவர்
Assessing Authority	-	மதிப்பீட்டு அதிகாரி; மதிப்பீட்டு ஆணைக்குழு
Assessment	-	வரி; வரி மதிப்பீடு
Assessment basis	-	வரி அடிப்படை
Assessment of Duty	-	தீர்வை மதிப்பீடு
Assessment of Tax	-	வரி மதிப்பீடு
Assessment Order	-	வரித் தீர்வை ஆணை
Assessment year	-	வரித் தீர்வை ஆண்டு
Assessor	-	தீர்வையாளி; மதிப்பீட்டாளர்; மதிப்பிடுபவர்
Assets	-	சொத்து; உடைமை நிலைமுதல்
Assets and Liabilities	-	உடைமைகளும் கடப்பாடுகளும்
Assign	-	ஒப்படை; உரிமை மாற்று; ஒதுக்கு; உரிமைப்படுத்து; மாற்றுரிமையளி
Assignee	-	ஒப்படை பெற்றவர்; உரிமை மாற்றம்; மாற்றுரிமை பெற்றவர்
Assignment	-	ஒப்படைப்பு; உரிமை மாற்றல்; ஒதுக்கல்; மாற்றுரிமை
Assignor	-	உரிமை மாற்றுநர்; ஒப்படை செய்பவர்; மாற்றுரிமையளித்தவர்
Assimilate	-	தன்னியலாக்கு; ஒருங்கிணை
Assist	-	உதவு
Assistance	-	உதவி
Assistant	-	உதவியாளர்
Associate	-	இணை; இணையான; கூட்டாளி; சார்பு

Association	-	கழகம்
Association of ideas	-	எண்ண இயைபு; ஒத்த கருத்து
Assort	-	வகைப்படுத்து
Assuage	-	மட்டுப்படுத்து; தணி
Assume	-	புனைவாகக் கருது; மேற்கொள்
Assume power	-	அதிகாரம் மேற்கொள்; பதவியேற்பு
Assumed	-	ஏற்றுக்கொண்ட; கற்பனை செய்த; ஊகித்த
Assumption	-	கற்பனை; ஊகம்
Assumption of charge	-	பொறுப்பேற்றல்
Assurance	-	உறுதி; நம்பிக்கை; காப்புறுதி; இசைவுறுதி; உறுதிமொழி
Assure	-	ஆறுதல் அளி; உறுதியளி
Asterisk	-	உடுக்குறி
Astrology	-	கணியவியல்; சோதிடவியல்
Astronaut	-	விண்வெளிப் பயணி; விண்செலவர்; வானியலர்; விண்வெளி வீரர்
Astronomy	-	வானியல்
Astute	-	கூர்மதியுடைய; சூழ்ச்சித்திறமுடைய
Asylum	-	காப்பகம்; புகலிடம்
At	-	மீது ; மேல்
At a very early date	-	மிக விரைவில்
At all events	-	எது நேர்ந்தாலும்
At an early date	-	விரைவில்
At any rate	-	எவ்வாறிருப்பினும்
At last	-	இறுதியில்; கடைசியில்
At once	-	உடனடியாக
